| | |
|---|---|
| மையம் : ______________<br><br>மேற்பார்வையாளர்<br>கையொப்பம்: ______________ | பெயர்: ______________<br><br>பதிவு எண்: ______________<br><br>நாள் : ______________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு – நவம்பர்–டிசம்பர் 2018**

**நேரம் : 1.30 மணி** **மதிப்பெண் : 50**

Time : 1.30 hrs. Total Marks : 50

**பகுதி – 1**

I. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**
***Read the following text and answer the questions given below in a single line.*** **(5x1=5)**

கன்னியாகுமரி இந்தியாவின் தென் எல்லையில் இருக்கிறது. இங்கு மூன்று கடல்கள் ஒன்றாக சங்கமம் ஆகின்றன. இங்கே உள்ள திருவள்ளுவர் சிலை 133 அடி உயரம் கொண்டது. கன்னியாகுமரியில் கோயில் கொண்டுள்ள இறைவி தேவி பகவதி அம்மன் ஆவார். இவர் கடலைப் பார்த்து கோயில் கொண்டுள்ளார். தென் எல்லையைக் கடல் அழித்துவிடுமோ? என்ற எண்ணத்துடன் அதைக் காப்பதற்காகவே பகவதி அம்மன் சிலை கடலைப் பார்த்தபடி அமைக்கப்பட்டுள்ளது.

**வினாக்கள் :**

1. கன்னியாகுமரி எங்கே இருக்கிறது?

______________________________

2. அங்கே எத்தனை கடல்கள் சங்கமம் ஆகின்றன?

______________________________

3. கன்னியாகுமரி உள்ள திருவள்ளுவர் சிலையின் உயரம் எவ்வளவு?

______________________________

4. கன்னியாகுமரியில் கோயில் கொண்டுள்ள இறைவியின் பெயர் யாது?

---

5. பகவதி அம்மன் சிலை ஏன் கடலைப் பார்த்தபடி அமைக்கப்பட்டுள்ளது?

---

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**
***Read the following poem and answer the questions given below in a single line.***

**(5x1=5)**

எவர் உடம்பினிலும் – சிவப்பே
இரத்த நிறமப்பா !
எவர் விழி நீர்க்கும் – உவர்ப்பே
இயற்கை குணமப்பா–
பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டுமப்பா !
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேல்குலத்தார்
திண்மை செய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார் !

**வினாக்கள்**

1. இரத்தத்தின் நிறம் என்ன?

---

2. எது இயற்கை குணம்?

---

3. யாருக்கு பெருமை வராது?

---

4. உலகம் யாரை நாடும்?

---

5. சிறப்பு வேண்டுமாயின் எதனைச் செய்ய வேண்டும்?

______________________________________________

III. **பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.**
***Form meaningful sentences using the following words*.** (5x2=10)

1. பண உதவி

______________________________________________

______________________________________________

2. மனம் கவர்ந்த

______________________________________________

______________________________________________

3. சோர்வுடன்

______________________________________________

______________________________________________

4. நீண்ட நாள்

______________________________________________

______________________________________________

5. அடிக்கடி

______________________________________________

______________________________________________

IV. **பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**
***Answer any Five of the following questions in a few lines.*** (5x4=20)

1. சேய்மைச் சுட்டு என்றால் என்ன? விளக்குக.
2. ஏழ்கடல் வைப்பு என்பது எதைக் குறிக்கும்?
3. இடப்பெயர் – விளக்கம் தருக.
4. மயக்கம் நீங்கிய புத்தர் சிறுவனிடம் என்ன கேட்டார்?
5. பொறாமை கொண்டவன் செல்வம் எத்தகையது?
6. திருவள்ளுவர் யாரை மேன்மையர் என்று கூறுகிறார்?

7. குற்றாலக் குறவஞ்சி குறிப்புத் தருக.
8. வெஞ்சினத்தில் பாம்பின் பல்பட்டால் மீளாது – விளக்குக.
9. ஆத்திசூடி – ஆசிரியர் பற்றி எழுதுக.
10. பண்டைக் கால தமிழகத்தின் பிரிவுகள் யாவை?

**V** **பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.**
***Write a letter on any one of the given subjects.*** **(1x10=10)**

1. நீ கண்டு மகிழ்ந்த நீர்வீழ்ச்சி ஒன்றினைப் பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
2. நீ விளையாட்டில் பரிசு பெற்றது குறித்து உன் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுதுக.
3. உனக்குப் பிடித்த கவிஞரைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

*****